ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2373/28 - 2024 පෙබරවාරි මස 28 වැනි බදාදා - 2024.02.28
2373/28 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, பெப்புருவரி 28.

**ஒழுங்குவிதிகள்**

01. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

02. பின்னர் திருத்தம் செய்யப்பட்ட மற்றும் 2023 யூன் மாதம் 09 ஆம் திகதிய 2335/26 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் இறுதியாக திருத்தம்

1A - PG 6664 — 404 (2024/02)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

செய்யப்பட்ட 2022 மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2024 பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் 06 ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்குவதனூடாக இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

03. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்படும்.

04. மேற்படி ஒழுங்குவிதிகளை செயற்படுத்தும் போது எழுகின்ற எந்தவொரு பிரச்சினைகளின் போதும் இறுதிமுடிவானது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 03 - 0039

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.